**ஈரோட்டு குருகுல வாச மாணவர்கள் நாங்கள். கலைஞர் இளம் வயதிலேயே ஒரு சிறந்த அமைப்பாளராக இருந்தவர். தஞ்சை மாவட்டத்தில் 1946 இல் திராவிட மாணவர் கழக சுற்றுப்பயணங்களில் கலந்துகொள்ள நானும் தந்தை பெரியாரால் அனுப்பப்பட்டேன்.**

இருக்கிறதிலேயே சின்னப் பையனாக இருக்கும் நான் மேஜையில் ஏறி நின்றுதான் பேசுவேன். சிறுவன் என்பதால் இரவில் பேச தாமதமானால் இடையில் தூங்கிவிடுவேன். கலைஞர் அப்பகுதியில் நடக்கும் கூட்டங்களில் எங்களுடன் கலந்து கொள்வார். அப்படி ஒருமுறை நெடும்பலம் அருகே புஞ்சை சங்கேந்தி என்ற என்ற கிராமத்தில் கூட்டம். பேசிவிட்டு இரவு ஒருவரின் வீட்டுத் திண்ணையில் படுத்துவிட்டோம். அது கோடை காலம். விடிகாலையில் முதல் பேருந்தில் ஏறி திருத்துறைப்பூண்டி போகவேண்டும். எங்களுடன் கலைஞரும் படுத்திருந்தார். இரவு இரண்டரை மணி இருக்கும். எங்களை அவர் எழுப்பிவிட்டார். 'ஒரே கொசுக்கடி... தாங்க முடியவில்லை. எப்படித் தூங்குகிறீர்களோ தெரியவில்லை? என்னால் தூங்கவே முடியவில்லை; நாம் இரவோடு இரவாக திருத்துறைப்பூண்டி போய்விடுவோமே' என்றார்.

நிகழ்ச்சி அமைப்பாளரிடம் கேட்டபோது இரவில் பேருந்து ஏதும் இல்லை என்றார். வேறு என்ன வசதி இருக்கிறது என்று கேட்டால் பக்கத்து வீட்டில் மாட்டுவண்டி இருக்கிறது என்றார்கள். அதைப் பூட்டச் சொல்லி அது எங்களை ஏற்றிக்கொண்டு கிளம்பியது. அதில் மேற்கூரை ஏதும் இல்லை. இருபுறமும் முளைக்குச்சிகள் செருகப்பட்டிருக்கும். அதிலே நாங்கள் நான்கு பேர் ஏறிக்கொண்டு ஒருவர்மேல் ஒருவர் தூங்கி விழுந்துகொண்டே ஆடி அசைந்து பயணம் செய்தோம். கலைஞர் அப்போது பேண்ட் அணிந்திருப்பார். நாங்கள் மூன்றாம் வகுப்பு ரயில் பயணிகள் போல் பயணம் செய்தோம். அப்போதைய கிராமத்துசாலைகளைப் பற்றி உங்களுக்குத் தெரியும்.

ஒருவழியாக விடிகாலை ஐந்து மணி அளவில் திருத்துறைப்பூண்டி ரயில் நிலையம் அருகே இருக்கும் நாங்கள் போய்ச்சேரவேண்டிய இல்லம் போய்ச் சேர்ந்தோம். அந்த வீட்டில் யாரையும் எழுப்ப எங்களுக்கு மனமில்லை. கலைஞர் வண்டியைத் திருப்பி அனுப்பிவிட்டார். அப்படியே எல்லோரும் வீட்டுத் திண்ணையில் படுத்துக்கொண்டோம். காலையில் அந்த வீட்டுக்காரர்கள் எங்களைக் கண்டு ஆச்சரியத்தில் வியந்துபோனார்கள். வந்த நேரத்தில் எழுப்பி இருந்தால் வீட்டுக்குள் வசதியாகப் படுத்திருக்கலாமே என அவர்கள் கடிந்துகொண்டனர். இல்லை அந்நேரம் உங்களை எழுப்பக்கூடாது என்பதால் வெளியே படுத்துக்கொண்டோம் எனச் சமாளித்தோம்.

இதுபோல் அந்தக் காலகட்டத்தில் இயக்கக்

கூட்டங்களுக்காக பல கடினமான பயணங்களில் அவருடன் சென்றுள்ளேன். அக்காலகட்டத்தில் என்னை சைக்கிளில் ஹேண்டில்பாரில் உட்கார வைத்து பல மைல் தூரம் மிதித்து, கூட்டத்துக்கு அழைத்துச் சென்றிருக்கிறார் கலைஞர். எனக்கு அன்றும் சரி; இன்றும் சரி சைக்கிள் ஓட்டத் தெரியாது என்ற உண்மையை சொல்லியே ஆக வேண்டும்!

அச்சமயம் தவமணி ராசன், பேராசிரியர், நாவலர் உள்ளிட்டோர் கலந்துகொண்ட திராவிட மாணவர் கறுப்புச்சட்டைப் படை மாநாடு திருத்துறைப்பூண்டியில் ஒரு தியேட்டரில் காலை நேரத்தில் நடந்தது. அதில் 'திருவாரூர் மு கருணாநிதி'யும் கலந்துகொள்வதாக ஏற்பாடு. நானெல்லாம் பேச்சாளராக இருந்தாலும் கலைஞர் வரும்போது அவரை அழைத்துவருவதற்காக ரயில் நிலையத்துக்குச் சென்று சென்று இருந்தோம். எல்லோரும் ஒருவரையொருவர் நன்கு அறிந்த நண்பர்கள். இவர் மாநாட்டுத் திறப்பாளர். திருவாரூரில் இருந்து அவர் வரவேண்டும். இவர் ரயிலில் இருந்து சோர்வாக

## மறக்க இயலாத மாட்டுவண்டிப் பயணம்!

இறங்கினார். கையைப் பிடித்து இறக்கினோம். கறுப்பு நிற ஷெர்வானி அணிந்திருந்தார். அறைக்கு வந்தவுடன் சட்டையைக்கழற்றினார். உடல் முழுக்க கொப்புளங்கள். எனக்கு அம்மை போட்டுள்ளது. நான் வராமல் இருந்தால் நன்றாக இருக்காது. சொன்னாலும் வீட்டில் விடமாட்டார்கள். அதனால்தான் ஷெர்வானி அணிந்து நன்றாக மறைத்துக்கொண்டு வந்துவிட்டேன், நான் பேசிவிட்டு உடனே சென்றுவிடுகிறேன் என்றார். அவர் தனியாக இருந்து விட்டு பேசிச்சென்றார். எவ்வளவு உடல்நலக்குறைவு இருந்தாலும் உணர்வுடன் வந்து பேசிச்சொல்வார். அங்கே கண்டியூர் என்ற இடத்தில் நடந்த மாநாட்டில் இந்தியை எதிர்த்துப் பேசியபோது மேடையிலேயே அவர் மயங்கி விழுந்துவிட்ட சம்பவமும் உண்டு.

1967 தேர்தல் முடிவுக்குப் பின்னர் தந்தை பெரியார் எனக்கு தோல்வி அனுபவம் முதல்முறை அல்ல. இதை எப்படி வெற்றிகரமாக ஆக்கிக்கொள்வது என்பது எனக்குத் தெரியும் என்று எழுதினார். அதன் பின்னர் அண்ணா சென்று பெரியாரை சந்தித்து இணக்கம் ஏற்பட்டது எல்லோருக்கும் தெரியும். அண்ணா பெரியாரை சென்று சந்திக்கவேண்டும் எனக் கூறியபோது, இவ்வளவு கடுமையாக எதிர்த்தவரைச் சென்று சந்திப்பதா என கட்சியிலேயே சிலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தபோது, அண்ணாவுக்கு மிக உறுதியாக இருந்து ஆதரவு தெரிவித்தவர் கலைஞர். அதை பின்னாளில் எங்களிடம் கலைஞர் கூறி இருக்கிறார். பெரியாரை சந்திக்கப் போவது ரகசியமாக வைத்திருந்து, திருச்சியில் அந்த சந்திப்பு, அன்பில் தருமலிங்கம் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

திருச்சியில் தமிழ் காட்டுமிராண்டி மொழி என பெரியார் பேசி இருந்த நிலையில் காங்கிரஸ் கட்சியினர் அதைப் பெரிய பிரச்னையாக மாற்ற முயன்றார்கள். அதைச் சரிசெய்ய திமுக பிரமுகர் கபாலி ஏற்பாட்டில் மந்தைவெளி அருகே பெரிய கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் பேசிய கலைஞர் தனக்கே உரிய பாணியில், தமிழை கல்தோன்றி மண் தோன்றா காலத்தே தோன்றிய மூத்த மொழி என்கிறார்கள். அதற்குப் பொருள் ஆதிகாலத்து மொழி என்பதே. அதைத்தான் பெரியார் மேல்போக்காக காட்டுமிராண்டி மொழி என்று சொல்லியிருக்கிறார் எனப் பேசினார். ஆனால் பெரியார் பேச வந்தபோது கலைஞர் சொன்னதைச் சுட்டிக் காட்டி, ' இதுபோல் கருணாநிதி சொன்னார். நான் காட்டுமிராண்டி மொழி என்று ஏன் சொன்னேன்? இது திருத்தப்படவேண்டிய மொழி என்பதால் சொன்னேன். அவர் ஒப்பனையெல்லாம் பண்ணி சொன்னார். நான் வெளிப்படையாகச் சொல்கிறேன்,' என்று ஒரே போடாகப் போட்டுவிட்டார். இரவு எங்களுக்கு உணவு கபாலி இல்லத்தில் ஏற்பாடாகி இருந்தது. கலைஞர் சிரித்துக்கொண்டே..'அய்யா என்றால் அய்யாதான்.. நாம் எப்படித்தான் விளக்கம் சொன்னாலும் அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார்!' என்றார். தந்தை பெரியாரோ,' மொழியைப் பற்றிய என் கருத்து என்பது... ஒரு பழைய கட்டடம் வெகு நாட்களாக உள்ளது என்றால்... அது ரிப்பேர் பார்க்கப்படவேண்டியது என்றுதானே அர்த்தம்!' என்று பதில் சொன்னார்.

அண்ணா அவர்கள் மறைந்தபிறகு யார் முதல்வர் பொறுப்புக்கு வருவது என்ற சூழல் இருந்தபோது நாவலர் போன்ற மூத்தவர் இருக்கையில் அவரை எதிர்த்துப் போட்டியிடுவதா என்ற இரட்டை மனநிலை குழப்பம் கலைஞர் அவர்களிடத்து நிலவியது. ஆனாலும் கோ. சி. மணி போன்ற சிலர் அவ்ரை அப்பதவிக்கு நீங்கள் தான் வரவேண்டும் என வலியுறுத்திக்